செ.வெ.எண்:44/ஜனவரி நாள்: 28.01.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

**மாநில அளவிலான பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள் வருகின்ற 04.02.2016 முதல் 06.02.2016 வரை நடைபெறவுள்ளது**

**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

மாநில அளவிலான பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான வாலிபால், இறகுப்பந்து, மேசைப்பந்து மற்றும் டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகள் 04.02.2016 முதல் 06.02.2016 வரை இராமநாதபுரத்தில் வைத்து நடைபெறவுள்ளது. இப்போட்டியில் தமிழகத்தில் உள்ள நிகர்நிலை பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான போட்டியில் முதல் இரு நிலைகளைப் பெற்ற அணிகளும் மற்ற அனைத்துப் பல்கலைக் கழக அணிகளும் கலந்து கொள்ளலாம். போட்டியில் கலந்து கொள்ளும் அனைத்து அணிகளுக்கும் தங்குமிடம் மற்றும் உணவு செய்யது அம்மாள் பொறியியல் கல்லூரிகளிலேயே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. டென்னிஸ் மற்றும் இறகுப்பந்து ஆகிய போட்டிகள் SDAT சீதக்காதி சேதுபதி விளையாட்டரங்கிலும், வாலிபால் மற்றும் மேசைப்பந்து ஆகிய போட்டிகள் செய்யது அம்மாள் பொறியியல் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. அனைத்து போட்டிகளும் மின்னொளியில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் முதல் இடத்தில் வெற்றி பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் ரூ.10,000/- ரொக்கப்பரிசும், இரண்டாம் பரிசு பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் ரூ.7,500/- ரொக்கப்பரிசும், மூன்றாம் இடம் பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் ரூ.5,000/- ரொக்கப்பரிசுமாக சேர்த்து மொத்தம் ரூ.2,70,000/- ரொக்கப் பரிசாக வழங்கப்படவுள்ளது.

மேற்கண்ட போட்டியில் கலந்து கொள்ள விருப்பமுள்ள பல்கலைக் கழக அணிகள் 01.02.2016க்கு முன்னர் dsoramd@gmail.com பதிவு செய்து விட்டு 04.02.2016 அன்று காலை 10.00 மணியளவில் செய்யது அம்மாள் பொறியியல் கல்லூரியில் நடைபெறவுள்ள அணி மேலாளர்களுக்கான ஆலோசனைக் கூட்டத்தில் அணிகளுடன் வந்து கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**